# TC-ன் உத்தரவுக்கு இவ்வளவுதான் மரியாதையா? விஜிலென்ஸில் சிக்குவாரா அட்மின்....

கனிமவளத்துறையில் இருந்து ஒரு பொக்கிஷமான நேர்மையான அதிரடியான IAS அதிகாரி போக்குவரத்து துறைக்கு ஆணையராக கடந்த 12-06-2022-ல் பொறுப்பேற்றார்.

கனிமவளத்துறையில் அவர் செயலாற்றிய பணிகளை அறிந்த பலரும் நிர்மல்ராஜ் IAS அவர்கள் பற்றி பெருமைபட்டுக் கொண்டிருக்கும் வேளையில், அவரால் ஒரு டைப்பிஸ்ட் மாறுதலுக்கு போடப்பட்ட ஒரு உத்தரவை கூட அவரால் செயல்படுத்த முடியாத நிலையில் அவருக்குரிய மரியாதைகள் இந்த போக்குவரத்து துறையில் இல்லாமல் போனது என்றால் என்ன சொல்வது?

ஒரு தலைமை அதிகாரியால் சென்னை STA -க்கு சங்கரன்கோவிலிருந்து பணியிட மாற்றம் செய்யப்பட்ட டைப்பிஸ்ட் வெள்ளைச்சாமிக்குரிய உத்தரவில் ஆணையரின் கட்டளைக்கு கூட obey பண்ணவில்லை.

ஒரு கடைநிலையான டைப்பிஸ்ட் - கூட தன் இஷ்டத்துக்கு ஒரு உத்தரவை கோரியும், ஆணையர் நிர்மல்ராஜ் IAS-ன் உத்தரவுக்கு மதிப்பளிக்காமலும், அந்த ஆணையர் மூலமாகவே ஏற்கனவே உத்தரவிட்ட அதனை ரத்து செய்ய வைத்து, ஆணையரின் அதிகாரத்தை சிதைத்து அவரையே தனது விருப்பத்துக்கு கீழ்படிய வைத்து,தனக்குரிய இடத்திற்கு பணியிட மாற்றம் பெற்று செல்கிறார் என்றால் இந்த மெத்த படித்த IAS ஆன, ஆணையரின் உத்தரவுகளுக்கு என்ன மதிப்புகள் உள்ளது?

மேலும், கடந்த எட்டு, ஒன்பது வருடங்களுக்கு மேலாக ஒரே அலுவலகமான சங்கரன்கோவில் RTO அலுவலகத்திலே பணியாற்றி வந்த வெள்ளைச்சாமிக்கு சிபாரிசாக வந்த, சங்கரன்கோவில் பகுதியில் உள்ள லாலா என்ற சங்கரபாண்டியன் என்ற தி.மு.க ஒன்றிய செயலாளரான உத்தரவுக்கு, உடனே ஆணையர் தலையசைத்து, ஆணையரால் போடப்பட்ட அந்த உத்தரவை ஆணையரே ரத்து செய்து, வெள்ளைச்சாமியின் சொந்த பகுதியான திருநெல்வேலிக்கே மாற்றம் கொடுக்கிறார் என்றால்.......

TC-யை, ஆகோ... ஒகோ... என போற்றியவர்களின் பார்வைகள் எல்லாம் டைப்பிஸ்ட் வெள்ளைச்சாமியால் கரும்புள்ளியானதை நிர்மல்ராஜ் IAS அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே பணிந்து பதிவிட்டுக்கொள்கிறோம்

இதற்கு எல்லாம் காரணமான நிர்வாக அதிகாரியான வெங்கட்ராமனின் ஜால்ராக்களும், அவரது ஊழலும் எழிலகத்தில் துள்ளி ஓடியது கூட ஆணையரின் அதிரடி பணிக்கு கரும்புள்ளி ஏற்பட காரணம் தான் என்று சொன்னாலும் அதுவும் மிகையல்ல தான் !

என்றைக்கு வெங்கட்ராமன் ஊழல் வழக்குகளில் சிக்குவரோ அன்று தான் எழிலகத்தில் நடக்கும் இது போன்ற ஊழல்களுக்கும் ஒரு முற்று புள்ளி கிடைக்கும்.



நிர்மல்ராஜ்
IAS



டைப்பிஸ்ட்
வெள்ளைச்சாமி



JTC
வெங்கட்ராமன்

நெல்லை கோபால்.
மூத்த பத்திரிகையாளர்
22-07-2022/9994478389